ஞாயிறு வெளியீடு. விலை 0-1-3. REGD. NO. M. 4455

விளம்பர விகிதம்.
இஞ்சு ஒன்றுக்கு 1-0-0.
சர்க்கார் கோர்ட்டு 2-0-0

# திராவிடநாடு

வருடசந்தா ரூ. 5—0—0
ஆறுமாதம் ரூ. 2—8—0
தனிப்பிரதி ரூ. 0—1—3

மலர் 3 | காஞ்சிபுரம் 30—4—44 | இதழ் 8.

## சிறந்த முறை.

சென்றவாரத் தொடர்ச்சி.

அங்ஙனம் காலத்தோடுநின்றுகூறுவனவற்றைநோக்குவாம். ஒழுக்கமுடைமைஎன்ற அதிகாரத்து "மறப்பினும் ஒத்துக்கொளலாகும் பார்ப்பான் 'பிறப்பொழுக்கங் குன்றக்கெடும்" என்ற குறட்கு அந்தணனது உயர்ந்தவருணம் எனப்பொருள் கூறிச்சாதிஉணர்ச்சியினைப் புகுத்துவாராயினர். பிறப்பினால் சாதி வேறுபாடு கருதாத தமிழர்க்கு இவ்வுரை பொருந்துமாறு யாங்ஙனம்? இஃதுமுக்குண வயத்தால் முறை பிறழ்ந்துரைத்தல் உரையாசிரியல்பெனக் கூறுவார் கூற்றுக்கேற்ப அமைந்ததோ,அன்றிக்காலத்தோடு நின்றதோ, வேறு ஆரியத்தின் சீரியசெயலால் நிகழ்ந்ததோ? அன்றிவஞ்சகச் செயலின் வன்மையோ அறியேம். ஆயின் யாம் கொள்ளுவது பார்ப்பார்என்பதற்குநூல் பார்ப்பார் ஆகிய சான்றோர் என்பதே. யாங்ஙனமெனின், "பொச்சாப்புப் பார்ப்பார் என்பதற்குப் பார்த்தல் என்ற தொழிலடியாகவைத்துப்பொருள்கொள்ளுங்கால், என்பார்ப்பான் பிறப்பொழுக்கங்குன்றக் கெடும்என்ற விடத்தும் அங்ஙனம் சொல்லுதலாகாது என்று கேட்கின்றேன். மேலும் நூல்பார்ப்பாராகிய அறிவுடையோரே ஒழுக்கத்தில் இழுக்குவரேல் மதிக்கண் மறுப்போல் பலருக்கும் வெள்ளிடைமலையாய் விளங்கித்தோன்றிப்பலராலும் இழிக்கப்படுவர்.

பார்ப்பார் என்பார் நூல்பார்க்கும் சான்றோரேயாவர் எனக்கொள்க. அன்றி அந்தணனது உயர்ந்தவருணம் எனப்பொருள்கொள்ளின் பல்வகை இடர்ப்பாடுகள்நேர்ந்து முன்பின் முரண்படு கொள்கைகள் பல தோன்றாநிற்கும், அஃது பிறப்பொக்கும் எல்லாஉயிர்க்கும் என்ற கொள்கையொடு முற்றும் முரண்படுதல்காண்க. இன்னும் அகப்பொருளில்தலைமகனாகவரும் நந்தமிழ்மகனுக்குத் தோழனாகநிற்பவன் பார்ப்பனப்பாங்கனும் ஒருவனாவான். அன்னான் அத்தலைமகன்வேட்கும் செயலைப்புரிந்து காதலரிருவரையும் காணுமாறுசெய்கின்றான். இன்னசெயல்புரியும் நந்தமிழ்ப்பாங்கனாயுள்ள பார்ப்பான் உயர்ந்தவருணமாதல் பரிமேலளகர் கருத்துப்படி எவ்வாறு? எனவே தமிழ்ப்பாக்களில் நல்லியல்புகள் பல நயமாய்த்தோன்றிநிற்கவும் அவற்றை விடுத்து இத்தகைய் உரையாகிய ஆரிய வலையில்நின்று ஆழ்ந்துபடுகின்றனரே.

இனியாயினும் இளைஞர்களே விழித்து நின்றுஎழுச்சிபெற்றுநல்உணர்ச்சிஉற்றுப் பகுத்தறிவு மேற்கொண்டு தமிழர் தம் பண்புகளை நம்மனோர் பலருக்கும் எடுத்துக்கூற விரும்புகின்றேன்.

இனி இங்ஙனம் பாக்களில் ஆரியக் கொள்கைகளைப்புகுத்துதற்கு உரையெழுதியும் உரையெழுதுமாறுசெய்தும் நம்மிடையேகலந்தனர் ஆரியர். கலந்துதமிழினாற்றழைத்து உயர்ந்து, முன்அம்மொழியினையும், அம்மொழிக்கொள்கைகளையும் இழித்துரைப்பாராயினர். அம்மட்டோ இழித்துக்கூறி ஏற்றம்பெற்றனர்.யாரால்? தமிழர்களால் எனின் இழுக்கொன்றுமின்று. ஏற்றம்பெற்ற அம்மட்டோ [illegible] செயல்கள் பலவற்றையும் தமதெனக் கொண்டு போற்றுவாராயினர். அன்னார் செயலைஅறிந்து மனமழிந்தநிலையில் நண்பரொருவர்பாடிய,

வஞ்சகர் வந்தவர்
தமிழாற்செழித்தார்
வாழ்வினில் உயர்ந்தபின்
தமிழையே பழித்தார்
நம்செயல் ஒழுக்கங்கள்
பற்பல அழித்தார்
நாமுணர்ந்தோம் இந்நாள்
அவரஞ்சி விழித்தார்

என்ற இயல்நலமடைந்த எழில்பெறு செய்யுளைக்கேட்டு இன்புற்றேன். ஏனெனில் கருத்தும் அப்பாட்டும், எனதொப்புமையுடைய காரணத்தாலேயாம். அதனை நோக்கியபின்பு உணர்ந்தேன் எழுந்தேன், உணர்ச்சிபெற்றேன். எழுச்சிபெற்றதனால் கண்டவைபல, அவைகீழ்க் கூறப்படுவன. நம்ஒழுக்கங்களுள், கற்பு பெண்கல்வி, மாராயம்பெறுதல் முதலியவற்றைத்தமக்கெனக்கொண்டு ஏற்றம் பெற்று அன்றுநமக்கு மாற்றம்தரும் நிலையிலிருந்தனர். ஆயின்இன்று அதுசெய்து பிழைக்கமுடியாது. ஏனெனின் திராவிட மாணவர் மாநாட்டில்கலந்த இளைஞர்களின் எழுச்சிஉள்ளம், துடிப்புள்ளம், கொதிக்குமுள்ளம், இனி இடந்தந்து நிற்காதுஎன்பதே அதற்குக் காரணமாகும். கற்பினில் நம்நாட்டில் செந்நிலையுற்றிருக்கும் இயல்பினையறிந்தும் அதற்கு இழுக்கங்கூறினர் ஆரியர். ஆதரவுதந்தனர் தமிழர்; அஞ்சாமைநிலையினை அறிவுறுத்தினர். அன்னாரைப் போற்றினர். புகழ்ந்தனர், அன்னாரின்செயலினை யாதுகூறி மனம் ஆறவல்லேம்? பண்டைக்காலத்து நல்லிசைப்புலமை மெல்லியலார் பலர் வாழ்ந்தமைகண்டு ஆரியர் தம்பெண்களைக் கல்விகற்பித்து, இன்று அறிவினாற்றலைமைபெற்று ஏற்றம்பெற்றனர். ஆயின் நம்மக்களோ பெண்கள் கல்விபெறும் அறிவின்றியும் அவர்கள்பெற்றாரில்லைஎன்றும் கற்றாலும் "பெண்ணறிவென்பது பேதைமைத்து" என்றும் "பேதைமை என்பதுமாதர்க்கணிகலம்' என்றும்கூறிப் பேதைமையில் தாம் ஆழ்ந்து அறிவிலியாகித் தாழ்ச்சியுறுகின்றனர். மேலும் தாம்காரணநிலையினால் தாம்பெற்ற அறிவின்மையை அறிவிக்கக்கருதி, "சான்றோன்எனக்கேட்டதாய்" என்றவள்ளுவர்மொழியினைச்சான்றுபகர்ந்து சான்றோராய்த்திகழ்ந்து பட்டம்பெற்றுப், பாரிலே பதவிபெறப்பதம்பார்த்து நிற்கின்றனர். இன்னோரின் நிலைதான் என்னே!

முற்காலத்து நந்தமிழ்மக்கள் செல்வர்பாற்பெற்ற சிறப்பினை இக்காலத்து ஆரியர்பெறுகின்றாரெனின் வஞ்சகச்செயலாலோ, அன்றி வேறாலோ என்றுகேட்கிறேன். இன்றும் சிலப்பதிகாரத்து மாலடன் சேரன் செங்குட்டுவனிடம் கூறுங்கால், நான் வேள்விசெய்து நல்லறம் பல பெறுதல் வேண்டுமென்று கூறுவது தங்களிடம் பொருள் பெறும்விருப்பாலன்று என்று கூறும் சொற்கள்வியப்பினும் வியப்பாயிருக்கின்றது. அஃது எனக்குமட்டுமன்று, என்குலத்தாருக்கும் எனக்கூறுதல் போன்றுளது. இங்ஙனமே ஆரியர் பலரும் தனக்குமட்டும் விரும்பாது தன்குலம் செழிக்கச்செயல் பல புரிந்தனரெனின், அன்னாரின் செயல்அறிவுடைமையா? அன்றி ஆரியத்தைப்பரப்

(8ம் பக்கம் பார்க்க)

# குடந்தை இசை வேளாளர் சங்கம்.

கும்பகோணம். ஏப் 21—

இன்று காலை இவ்வூர் பிரம்ம வித்யா லாட்ஜில் இசை வேளாளர் சங்க ஆண்டு விழா. சென்னைத்தோழியர் குஞ்சிதம்குருசாமி தலைமையில் நடைபெற்றது. பிடில் வித்வான் தோழர் இராஜமாணிக்கம் பிள்ளை எல்லோரையும் வரவேற்று ஒரு பிரசங்கம் செயதார். அவர் பேசியதன் சாரம்:—

## தோழர் இராஜமாணிக்கம் பிள்ளை பிரசங்கம்.

நமது சமுகம் புராதனமானது புகழ் பெற்றது. பெருமைவாய்ந்தது, புனிதத் தன்மைபெற்றது. உயரிய இனிய கலைகளில் புகழ்பெற்றது, மதிப்பும் கௌரவமும் வாய்ந்தது. தர்மசீலர்களானசீமான் சீமாட்டிகளை உடையது, கல்வியில் சிறந்த கற்றோர் பலரைக்கொண்டது. இன்றைய நிலைமையில் நாம் வறுமை, பிணி முதலியவைகளுக்கு புகலிடம். இனிய கலைகள் பயிற்சியும் புறக்கணித்தோம். மதிப்பிழந்தோம், இழிசொற்களுக்கு இலக்கானோம். புனிதத் தன்மையை மறந்தோம். ஜீவனோபாயத்திற்குத்தவிக்கிறோம். கல்வியில்சிரத்தைக்குறைவு. அநாகரிகத்தை நாகரிகமாகக் கொண்டாடுகிறோம். பிறசமுதத்தார்கள் இழிசொல் சொல்லுகிறார்கள். மானம்பெரிது,வாழ்வு பெரிதல்ல என்ற பாரதியார் வாக்கைப் புறக்கணித்தோம். விலைமாதர் என்ற இழிசொல்லை நமது சமுகப்பெண்மணிகள் பட்டம் சூட்டிக்கொண்டார்கள். கேவல நிலைமையில் நம் சமுகம் இருந்து வருகிறது.

நாம் மற்ற சமுகத்தினர்களைப்போல் எல்லாத் துறைகளிலும் முன்னேற்றமடைய என் சிற்றறிவுக்கு எட்டியமட்டும் சொல்லுகிறேன், பொட்டுக்கட்டுதல் என்ற அநாகரிக வழக்கத்தை நம் பெண்மணிகளிடமிருந்து ஒழிக்கப் பாடுபட வேண்டும். கண்யமாக வாழ விவாகமே சிறந்த முறை என்பதை உணர்தல்வேண்டும். துன்மார்க்கக் காரியங்களை நம்முடைய சமுகத்திலிருந்து விலக்க நாம் எல்லோரும் பாடுபடவேண்டும். ஆடம்பர வாழ்க்கையை அகற்றிச் சிக்கனவாழ்வை நாடவேண்டும்.

நமது சமுக ஆடவர்களைப்பற்றி ஒரு வார்த்தைசொல்ல விரும்புகிறேன். மற்ற எந்தச் சமுக ஆடவர்களைக்காட்டிலும் நமது சமுக ஆடவர்கள் கல்வியில் மோசமாக இருந்துவருவதுடன் சிலர் மது போன்ற லாகிரிவஸ்துக்களை மிகுதியாக அருந்துகிறார்கள் அதுமிகவும், வருந்தத் தக்கது.

## 6-வது ஆண்டுவிழாக் கொண்டாட்டம்.

——

### தோழியர் குஞ்சிதம் குருசாமி, தலைமை உரை.

தோழர்களே!

இச்சங்கத்தின் ஆறுவது ஆண்டுநிறைவு விழாக் கூட்டத்திற்கு என்னைத் தலைமை வகிக்குமாறு கட்டளையிட்ட உங்கள் அனைவருக்கும் என் அன்புமிக்க நன்றி. இசை வேளாளர் சங்கம் ஏற்பட்டதுமுதல் இதுவரையில் பல அரிய காரியங்களைச் சாதித்திருக்கிறது என்று அறியநான் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன். ஆனால் நம்நாட்டிலுள்ள இதர சமுகங்கள் எவ்வளவு துரிதமாக முன்னேறியிருக்கின்றனவோ, அதில் நூற்றில் ஒரு பங்குகூட இச்சமுகம் முன்னேறவில்லையென்பதை நாம்யாவரும் நன்கு உணர்ந்துகொள்ள வேண்டியது அவசியம் இதற்குக் காரணம் என்ன என்பதையும் நாம் அறிந்து கொள்ளவேண்டும். உலகத்தில் நடக்கும் நிகழ்ச்சிகளை நாம் நன்கு கவனித்து உலக மக்களுடன் பல துறைகளிலும்போட்டி போடவேண்டுமென்ற பெரிய நோக்கம் நமக்கு இருக்கவேண்டும். அப்போது தான் இவ்வுலகில் பிறந்துவளர்ந்து மனித சமுதாயத்தில் நாமும் ஒரு பகுதிஎன்று கூறிக்கொள்ள இலாயக்குடையவர்களாவோம்.

### ஹிந்து மதம்.

ஹிந்துமதம் இந்நாட்டில் பலவித தீமைகளை உண்டாக்கியிருக்கிறது என்பதைப்பல பேறிஞர்கள் எடுத்துக் காட்டியிருக்கின்றனர். இம்மதம் இந்நாட்டிலுள்ள ஒரேஒரு கூட்டத்தின் நன்மைக்காக ஏற்பட்டது. அந்தக்கூட்டத்தாரை மேன்மைப்படுத்தவும் இதர சமுகங்களை அவமானப்படுத்தி, அழுத்திவைத்து, அடிமையாக்கி நசுக்குவதற்காகவுமே ஹிந்து மதம்வேலை செய்கிறது என்பதை மெய்ப்பிப்பதற்கு நூறல்ல, ஆயிரமல்ல, லக்ஷக் கணக்கான உதாரணங்கள் கூறமுடியும். அவைகளில் இந்தச் சமுகமும் ஒன்று. சங்கீதத்திற்கும், கோவில்களில் ஆடல் பாடல்களுக்கும் என்று தனியாக ஒரு சமுகம் ஏற்பட்டிருப்பது எந்த நாட்டிலும், எந்தமதத்திலும், எந்தமனிதர் கூட்டத்திலும் இல்லாதஒருமுறை என்பதைச் சரித்திரம் படித்தவர்கள் நன்கு உணரலாம். சங்கீதம் மனிதஉணர்ச்சியின் சிகரம். ஆனால் இத்தகைய சங்கீதத்தைப் பரம்பரையாகக்கற்றுப் பலவழிகளில்நம் மக்களுக்கு ஊட்டும் நம்மவர்கள் எப்படி நடத்தப்படுகிறார்கள் என்பதைப்பற்றி நினைக்கவே வெட்கமாயிருக்கிறது. தமிழர்கள் ஒரு காரியத்தைச் செய்தால் அதைஇழிவாக மதிப்பதும், அதேகாரியத்தை ஆரியர்கள்செய்தால் உயர்வாகக் கருதுவதும் சர்வசாதாரணமாகிவிட்டது. நாம் வைத்திருப்பது, "சோற்றுக்கடை" ஆரியர் வைத்திருப்பது "Restaurant-ரெஸ்டொராண்ட்", "Cafe—கபே"; நாம் வைத்திருந்தால் "மளிகைக்கடை", ஆரியர் வைத்திருப்பது "Provision Stores"; நம்முடையது "துணிக்கடை-ஜவுளிக்கடை,,; பிறர்வைத்தால்அதற்குப் பெயர் "General Stores—Swadeshi Emporium"; நம்மவர்கள் பாடினால் "பாட்டுக்காரர்கள்"; அவர்களோ "சங்கீத வித்வான்கள்"; நம்பெண்கள் ஆடினால் அதற்குப்பெயர் "சதிர்"; வேறு பெண்கள் ஆடினால் "பரத நாட்டியம்." இன்னும் நூற்றுக்கணக்காக உதாரணங்கள் சொல்லிக்கொண்டே போகமுடியும். சுருங்கக் கூறினால் "மாமியார் உடைத்தால் மண்சட்டி; மருமகள் உடைத்தால் பொன் சட்டி'. இந்த நிலைமை வரவர வளர்ந்துகொண்டே போகிறதே தவிர, குறைவதற்கு ஒருசிறு அடையாளத்தையும் காணோம். இதற்குக்காரணம் என்ன? நம்சமுதாயமும் இதர தமிழர் சமுதாயங்களும் ஒற்றுமைப்பட்டு ஒரு இனமாக ஒன்று சேர்ந்து, நம்இனத்திற்கு எதிராய்அன்றுதொட்டு இன்றுவரை இருந்து வரும் மற்றொரு இனத்தின் சூழ்ச்சியையும், சுயநலத்தையும், ஏமாற்றுதலையும் அறிந்துகொள்ளும் சக்தியும்அறிவும் நம்மவருக்கு ஏற்படவில்லை.

### தன்மானம்

இனி, இந்தச்சமுகத்தில் பெண்களை எவ்வாறு ஹிந்து மதத்தின் பெயரால் 'கடவுள்' என்ற பெயரைக்கூறி இழிவுபடுத்திவருகிறார்களோ, அதே மாதிரி 'வழக்கம்', 'மரியாதை' என்றபூச்சாண்டிகளைக்காட்டி ஆண்களையும் அவமானப்படுத்தி வருகிறார்கள். இந்த அவமானத்தைஇனிமேல் நாம் ஒரு நிமிஷமும் பொறுத்துக்கொள்ள முடியாது; இன்றே ஒழித்துவிடுவதென்று உறுதி செய்துகொள்ளவேண்டும். பெண்களைப் பொட்டுக்கட்டும் வழக்கம் வரவரஒழிந்துகொண்டேவருகிறது. டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியவர்களின் விடாமுயற்சியினாலும் உழைப்பினாலும் இத்தீயமுறை ஒரு அளவுக்கு நின்று விட்டது என்றே கூறலாம். இவ்விஷயத்தில் எவ்வளவோ எதிர்ப்புக்களைச் சமாளித்து வெற்றிபெற்றஅம்மையார் அவர்களை இச்சமுகம் என்றென்றும் மறக்கவே முடியாது. ஹிந்து மதத்தின் பெயரால் நமது கடவுள்கள் எப்படி

(7-பக்கம் பார்க்க.)

தொடர்கதை

# பார்வதி பி. ஏ;

சௌமியன்.

கதை கற்பனையே, கதையில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவனவல்ல.

[முன்பு:-லோபி ஆலாலசுந்தரர், அறிமுகப் படுத்தப்படுகிறர். அவருக்கு வாரிசாகவர இருக்கும் பார்த்திபன் எனும் வாலிப வாய்வீரருக்குக் காதலி பார்வதி B. A; இவள் ஓர் இலட்சியவாதி. குமார் எனும் பாட்டாளி, பார்த்திபனுடைய பிரசங்கத்தில் இலயிக்கிறதைத்தார் பொதுப் பணத்தைக் கொள்ளையடித்து மறைந்து விட்டதாகப் பத்திரிகையிலே செய்தி. பார்வதி கவலைப் படுகிறாள். உத்தமி என்பவளின் சிநேகிதத்தால் பார்வதிக்கு டைபிஸ்ட் வேலை கிடைக்கிறது. பார்த்திபனால் 'ரட்சகன்' என்னும்பத்திரிகை நடத்தப்படுகிறது. தநக்கள் தமாதநபரர், பார்த்திபனுக்கும் ஜெயத்துக்கும் சிநேகிதம் உண்டாகும்படி வேலைசெய்து மகிழ்ச்சி யடைகிறர். இதற்கிடையே பார்வதியின் தோழி, உத்தமிக்கு நரசிம்மன் என்பவன் காதலனுகிறன். பார்த்திபன், கதகளிநடனம் பார்க்கக் கேரளம் செல்கிறன். உத்தமி கருவுற்றாள். நரசிம்மன், குமுதினியென்பவளைக் கலியாணம்செய்து கொண்டு, உத்தமியைக் கைவிடுகிறன், குமுதினியின் உதவியால் உத்தமி பெங்களூர் செல்கிறள். அங்கு லேடிடாக்டர் லலிதாதன் கதையைக் கூறுகிறள். பிறகு,....]

அச்சுத் தொழிலாளர் மாநாட்டுச்செயலாளர் என்று கூறப்பட்ட அந்த ஆறுமுகம் என்பவனைக், கம்பவுண்டர், அழைத்துவந்து, பார்வதியிடம் அறிமுகப்படுத்திவைத்தான். ஆறுமுகத்தின் நடையுடை பாவனையே, "அம்பக்"என்ற பட்டம் அவனுக்கு உரித்தானது என்பதைக்காட்டிற்று. பார்வதி,பார்த்திபனைப் பற்றி, ஆறுமுகம் மூலமாகப் பல விஷயமறியலாமென்று நினைத்து அவனிடம் மரியாதையாகவே பேசலானாள். ஆறுமுகத்தின் சுபாவம், மரியாதைக்கு மரியாதைகாட்டும் விதமானதல்ல. மிரட்டுபவர்களிடம் பணிவாகப் பேசுவான். பணிவாகப் பேசுபவனிடம், அட்டகாசம் செய்வான். ஊரிலே உள்ள சாந்தசீலர்களைக்கண்டால், தானொரு பெரியபோக்கிரி என்று பேசிமிரட்டிப் பார்ப்பான். ஊர்ப்போக்கிரிகள் முன்போ ஒடுங்கி நடந்துகொள்வான். இது அவனுக்குச் சுபாவம்மட்டுமல்ல, பிழைப்புக்கு மார்க்கமும் அதுவாகவே இருந்தது. "அண்ணேன்! எனக்குத் தலை எறக்கமா இருக்குது, மனசு ரொம்பப் பதறுது, மானந் தானேண்ணே பெரிசு, உசிரா! ஆறிலேயும் சாவு நூறிலேயும் சாவுன்னு பெரியவங்க சொல்லலியா?" என்று ஆறுமுகம் உள்ளூர்ப் போக்கிரி எவனிடமாவது, அவன் கொஞ்சம் போதையிலே இருக்கும்நேரம் பார்த்துப் பேசுவான். "டே! ஆறுமுகம்! என்னடா தேவை உனக்கு! டே!உன்மனசுபதறுது" என்றுபோதைக்காரன் கொஞ்சம் அன்புடன் கேட்டுவிட்டால் போதும்,ஆறுமுகம், அவன்காலைத் தொட்டுக் கும்பிட்டு, "அண்ணேன்! நான் சத்யம் செய்றேன். நான் நீங்கபெத்த மகன் மாதிரி, அண்ணேன்! ஒங்க தம்பி மாதிரி! எத்தனையோ வருஷமா நம்ப மாமன் மச்சான் மாதிரி பழகிவந்திருக்கிறோம். நீங்கதான் எனக்குக்குரு" என்று ஒரே சமயத்திலே சீடன், மைத்துனன், தம்பி, மகன், என்ற இத்தனை உறவும் கொண்டாடுவான். பிறகு ஆரம்பிப்பான் தனது வேலையை "அந்தத்தறுதலைப் பயல் இருக்கிறானே, தாமோதரம், அவன் உங்களை ஒரே நவுண்டிலே கீழேவீழ்த்திடுவானாம். அண்ணேன்! கடைவீதி சிரிச்சிது, என்காதிலே கேக்கப்பிடிக்கலே, அந்தப்பய, அவ்வளவு தாறுமாறாகப்பேசினான். குனிஞ்சதலை நிமிராமே, இதுவும் நம்ம போறாதவேளைபோலிருக்குன்னு வந்துட்டேன். இருக்கட்டும்டா, டே! தாமோதரம்! உன்திமிரு, என்குருவை நீ திட்டித்தப்பிச்சிக்கிட்டே. யானைக்கும் அடிசறுக்கும்னு சொல்வாங்க, உன்னைக் காட்டறேன் ஒரு வேலை. டே! தாமோதரம், சோதாப்பயலே, என் குருவிடமாடா நீ கோணச் சேட்டை செய்றே" என்று பாதி, குருபீடத்திலே இவனை அமர்த்திய அந்தப் போதைக்காரனைப் பார்த்தும், பாதி, தாமோதரம் என்ற மற்றொரு போக்கிரி எதிரிலே நிற்பது போலே பாவனை செய்தும் பேசுவான். போதைஏறியரௌடிக்குஅப்போதுதான் தெரியும், தாமோதரம் என்ற ஒரு போக்கிரி தன்னைப்பற்றி இழிவாகப்பேசினான் என்று. "ஆறுமுகம்" என்று ஆத்திரத்தோடு அந்தப் போக்கிரி, ஆறுமுகத்தின் முதுகிலே ஒருதட்டுதட்டுவான், சொந்தம் பாராட்டிக்கொண்டு, ஆறுமுகம் துடைத்துக்கொண்டே, "அண்ணேன்" என்று பதிலுக்குப் பாராட்டுமொழி பேசுவான். "என்னை அந்தப்பய தாமோதரமா சவாலுக்கு இழுத்தான்? புறப்படு இப்பவே, அவன் தலையைக் கீழே உருட்டிட்டு மறுவேலைபார்க்கிறேன்" என்று போதைக்காரன் கூவுவான். "வேண்டாம்! அண்ணேன்! யானைக்குருவிமேலே இராமபாணம் வீசப்படாதுன்னு ஊரிலே பெரியவங்க சொல்வாங்க. அவன் கிடக்கிறான் சின்னப்பய, அவனைப்போய்நீங்கசட்டை செய்றதா?" என்று போதைக்காரனைச் சாந்தப்படுத்துவது போலப் பேசிக் கோபத்தை மூட்டிவிடுவான். அதனுடைய விளைவாக, அடுத்தவாரத்திலே புலிக்குட்டி புண்யகோடிப்பிள்ளைக்கும், தங்கப்பல் தாமோதர முதலிக்கும். பெங்களூர் பெரியகடை மைதானத்திலே, குத்துச்சண்டை, நடைபெறும், அதற்குக் கண்டிராக்டர், அம்பக் ஆறுமுகம் தான் இருப்பான். இரண்டு பயில்வான்களுக்குள் கலகமூட்டிக், காசுதேடப்பார்ப்பான். இருவரிலே, யாரிடமும் அம்பக் ஆறுமுகத்துக்கு அக்கறை கிடையாது. எப்படியாவது இருவருக்குள் சண்டை மூட்டிவிட்டால். அதனால் தனக்கொரு இலாபம் கிடைக்கும் என்ற நோக்கந்தான். ஊரிலே அடிக்கடி நடைபெறும் குத்துச்சண்டைகள், ஸ்பெஷல் நாடகங்கள், கதாகாலட்சேபம், பஜனைகள், முதலியன ஆறுமுகத்தின் மூளையிலே அவ்வப்போது உதயமாகும் யோசனைகளே யாகும். அந்தந்த நிகழ்ச்சிகளின் போது, ஆறுமுகத்திடம், பணம் தாராளமாக நடமாடும். அவன் குடித்துவிட்டு மீதமாக்கின பணந்தான், எடுத்துக்கொண்ட காரியத்துக்குப் பயன்படும். அம்பக் ஆறுமுகத்தினிடம் எப்படிப்பலர் சிக்கிக் கொண்டனர் என்பது ஆச்சரியமாக இருக்கும். பட்டதாரிகளுடன் சிலசமயம் பவனி வருவான், அந்த நேரத்திலே ஊரிலே கல்விமாநாடு நடக்கிறது என்று பொருள். அந்தச்சமயத்திலே அவர்களுக்குத் தகுந்த விதமாகப் பேசிமயக்குவான். மிட்டாதாரர்கள் மிராசுதாரர்களுடன் சில சமயத்திலே மோட்டாரில் சுற்றியபடி இருப்பான், அது எலக்ஷன் சமயம், சிறந்த சங்கீதவித்வான்களுடன் தசரா காலத்திலே உலவுவான். பொது நலத் தலைவர்களுடன் சிலசமயம் உலவுவான், அது அவனுடைய பாஷைப்படி, மாநாட்டுச்சீசன். ஏகாதசி, இராமநவமி, சிவராத்திரி, முதலிய பண்டிகைகளின் போது, பரமபாகவத சிரோன்மணியாக நடிப்பான், ஆறுமுகம் ஒரு அம்பக் பேர்வழி என்பதும், அவனுக்குக், கொள்கையோ, கோட்பாடோ கிடையாது என்பதும், எந்தெந்தச் சமயத்திலே யாராருடன் கூடினால் என்னென்ன இலாபம் கிடைக்கும் என்ற ஆராய்ச்சியன்றி வேறொன்றும் அவனுக்குத் தெரியாது என்பதும், பலருக்குத்தெரியும். என்றபோதிலும், அவன் அடிக்கடி, விதவிதமான வேடமிடும்போதும், புதுப்புது மனிதர்கள் அவனுடன் சேருவர், அவர்களின் துணைகொண்டு அவன் சமுதாயத்திலே, சூதுவாதறியாதவன்போல உலவுவான். கதர் ஜுப்பாவும், கைராட்டை பொறித்த தொப்பியும், பனிச்சனத்

5-ம் பக்கம் பார்க்க.

# திராவிட நாடு.

காஞ்சி 30—4—44 ஞாயிறு


## முப்புரியின் சக்திப்பொறி!

முப்புரியினர், முனிவர் காலந்தொட்டு ஆதிக்கம் செலுத்திவந்தது போன்றே முன்ஷி காலத்திலும் இருக்கவேண்டு மென்றும், என்றென்றும் அந்த ஆதிக்கம் நிலைத்திருக்க வேண்டுமென்றும், கருதி யிருக்கும் போக்கினை விளக்கியும் கண் டித்தும் நாம் எழுதுங்காலையிலெல்லாம், பல்லைக்காட்டிப் பாகுபோல்சொல்லைவீசி டும் வல்லவராம் ஆரியரிடம், சொக்கிச் சிக்கிச் சீரழிவுபடும் சிறுமதியினருக்குச் சீற்றம் பிறப்பதுண்டு. எடா. மூடா! என்றோ ஓர்நாள் அந்த ஆரியர் ஆர்ப்ப ரித்தனர், இதுகாலை எது அந்த நிலை, கொட்டம் எது திட்டம்எது. திட்டமும் விளைவும் மட்டமாக்கப்பட்டு விட்டதை அறியாது, ஆரிய ஆதிக்கம், ஆரிய ஆதிக் கம் என்று கூவுகிறாயே, வேறுபணி புரி யாயா, பிணிக்கோர் மருந்து தேடாயா, என்று கூறுகின்றனர், பழய போதை பார்ப்பனரிடம் இன்று இல்லை என்று கருதிடும் மனப்பான்மையினர். இந்தப் போக்கு அவர்களின் புத்தி பழுதுபார்க் கப்படவேண்டிய அளவு பாழ்பட்டுக்கிடக் கிறது என்பதனைத்தான் விளக்குகிறது என்று கூறுவோம், ஆனால் அவர்களோ, நாம்வசை வீசுகிறோம. தமதுகண்ணியத் தைக் கசைகொண்டு தாக்குகிறோம் என்று கூறுவர், கோபிப்பர், கூத்தாடு வர், எனவே குறைமதிகொண்டோர் என்று அவர் தம்மைக்கூறுது, நிறைந்த பெருங்குணவான்களான இவர்கட்கு, நிலைமையும், அந்த ஆரிய இனத்தின் நினைப்பின் தன்மையும் தெரியவில்லையே என்று இரக்கத்துடன் இயம்புகிறோம். எந்தக்காரியத்திலே ஆரியர் ஈடுபட்டிருப் பினும், அவர்களின் நோக்கம் எப்படியே னும்தமது ஆதிக்கத்தைநிலைநிறுத்தவேண் டும் என்பதுதான். சர்வபரித்தியாகம் செய்வதற்காகவே ஏற்படுத்தப்பட்ட பர் ணசாலைகளிலே இருக்கின்றனர், முப்புரி தரித்து, மும்மலம் நீக்கப்பட்டு,மும்மூர்த் திகளைக் கண்டறிந்த முனிபுங்கவர்கள் என்று, புராண காலத்திலேகூறியது, முடியுடைவேந்தரை ஆரியரின் அடிபணி யச்செய்திடத்தான்! சகல கலாவல்லபர், தியாக மூர்த்திகள், சட்ட நிபுணர்கள், எமது சர்மாக்கள், என்றுகூறிச்சர்க்கார் மாளிகையிலே நின்று எகாதி பத்யத்துக் குச் சாமாரம்வீச ஆரியரில் ஒரு பிரிவி னர் இருப்பதும், தமது இனத்தின் உயர் வை இருப்புக்கோட்டையாக்கச் செய்தி டத்தான், அந்த அஞ்சாதநெஞ்சினன் அறிவிலே மிஞ்சிட ஆளில்லா வல்லுநன், [illegible]மன்றிப் பிறிதோர் சுவைவேண்டாப்பான்மையோன், மகாத் மாவின் அடிச்சுவட்டைப் பின்பற்றுப வன், என்று கூறிக்கொண்டு ஆரியசில் ஒருசாரார்தேசிய வாசஸ்தலத்தில் பேசிக் கிடப்பதும், அந்தப் போர்முனையின் மூலம், தமது ஆரிய ஆதிக்கத்தை நிலைத் திடச்செய்யத்தான், இதிலே சந்தேக மிருப்போர், நான் மகாத்துமாவின் சீடன்! என்ற நூலாசிரியரும், முப்புரி தரித்தவரும் முன்னாளில் காங்கிரஸ் மந் திரியாகப் பம்பாயில் காட்சிதந்தவரும், இன்னாளில் என் உயிருள்ளமட்டும்பாகிஸ் தான் தரமாட்டேன் முஸ்லீம்களுக்கு என்று எக்காளமிடுபவரும், விக்ரமாதித்ய காலத்தை எண்ணி எண்ணிவிம்மிக்கிடப் பவருமான ஸ்ரீஜக் முன்ஷி என்பவர், இருகிழமைக்கு முன்னர் அமிர்தசரசிலே அகில இந்திய பிராமண மாநாட்டிலே ஆற்றியுள்ள சொற்பொழிவைப் படிக்கக் கேட்டுக்கொள்கிறோம். பார்ப்பனரல்லா தார் கிளர்ச்சி என்றும், திராவிட இயக்க மென்றும், தகாதனசெய்கின்றீரே,பார்ப் பனர், மாநாடு கூட்டப்படுகின்றனரா, மார்தட்டுகின்றனரா, மண்டபத்திலே தமது ஆட்சியே நிலவவேண்டுமென்று, முழக்கமிடுகின்றனரா, என்று நம்மைச் சிலர் கேட்பதுண்டு. பொருளற்ற கேள்வி அது. எனினும் வெள்ளையாக விளங்கும் இந்த விஷயமேனும்அவர்கட்கு,விவேகம் வழங்கும் என்று நம்புகிறோம். இந்த 1944ல், எப்ரல் திங்களில், பத்துப்பதி னைந்து நாட்களுக்கு முன்னர் பஞ்சாப் மாகாணத்தில். அமிர்தசரஸ் என்ற நக ரிலே, ஆரியர், அகில இந்திய பிராமண மாநாடு நடத்தியிருக்கிறார்கள். மாயூநதிக் கரையிலும் மணிப்பூர் அருகேயும், நீப்பர் நதிக்கரையிலும் பிற இடங்களிலும், வீரர் ஆயிரமாயிரவர் தமது குருதியை நெய் யாக்கி, உடலைச் சமித்தாக்கி வீரயாகம் புரியும் இதே வேளையிலே, ஆரியர் விலாப் புடைக்கத் தின்னவும் வீரரைச்கோழைக ளாக்கவும், அறிவை அழிக்கவும், செல் வத்தைச் சீரழிக்கவும், கங்கை நதி தீரத் திலும் சிந்துநதி தீரத்திலும், யாகம்நடத் தினர். இங்ஙனம் யாகம் நடத்துவதும், ஆரியசுகபோகத்துக்கு ஆதரவு திரட்ட மாநாடு நடத்துவதும், எதனை உணர்த்து கிறது!

“ஆரியப்பண்பு இருக்கிறதே அது ஆல யத்தோடு நின்றுவிடுவதல்ல, அரண்ம னைக்கும், போர்க்களத்துக்கும், மோட்ச சாம்ராச்சியத்துக்கும் வழிகாட்டும் வல் லமைகொண்டது ஆரியநாகரிகம்” என்று ஸ்ரீஜத் முன்ஷி கூறியிருக்கிறார். இது எந்தக்காலத்து மனப்பான்மை? “ஆரிய கலாசாரம் அவனிஎங்குமாதிக்கஞ்செலுத்த வேண்டும்; அதற்கு ஆவன செயல்வேண் டும்” என்று கூறினாராம்! ஆயிரம் ஆண்டு களாக ஆரிய ஆதிக்கம் அப்புஅழுக்கின்றி இருந்துவந்திருக்கிறது, இன்றும் அதன் வளம் கெடவில்லை என்று செப்பினு ராம். அம்மட்டோ! ஆரிய ஆதிக்கத்தைக் குறையாதிருக்கச்செய்யும் கடமையை ஆரிய அணங்குகள் மேற்கொள்ளவேண் டும், என்றுயோசனை கூறினாராம். சேல் விழியும், வில்போன்ற புருவமும், செம் பொன்மேனியும், துடியிடையும் தொட் டால் துவளும்போக்கும்கொண்டஅணங் குகளின் அபாரசக்தியை, யார் அறியா தார்! சாம்ராஜ்யங்கள் பல, சல்லாபி களின் உல்லாசத்துக்கு அடகுவைக்கப் பட்ட வரலாறும் உண்டு! ஆரிய அணங்கு களின், சீரிய அழகும் கூரியமதியும், தேறிய திறனும், ஆஸ்ரமவாழ்விலே, ஆண்ட வரை வரவழைத்திருக்கிறது. கணவன் இருக்கும் நேரத்திலும். சில பர்ணசாலை களிலே கணவர்இல்லாத நேரத்திலும், அரண்மனைகளை ஆட்டிப்படைத்திருக் கிறது, மன்னர்களின் மதியையும் வீரர் களின் விழியையும் கலக்கிஇருக்கிறது, அதரமெனும் வில்லிலே புன்சிரிப்பு எனும் பாணத்தைத்தொடுத்து அவர்கள் போரிட்டுப்பெற்ற வெற்றிப்பெருமிதங் கள் புராணஇதிகாசங்களிலே பல பல காணக்கிடைக்கும். ஆரியதேவனே, மோகினிஎனும் ஆரணங்காக வேடமிட் டுத்தானே. அசுரரை அழித்ததாகக் கதை கூறுகின்றனர். ஆகவே முப்புரிதரித்த முன்ஷி, சக்திப்பொறிமூலம், தமது இனத்தின் ஆதிக்கத்தை நிலைநிறுத்தமுடி யும் என்று நம்பியதிலும், அந்த யோச னையை மாநாட்டிலே வெளியிட்டதிலும், ஆச்சரியமில்லை!

மாதரசிகளே! உமது மணாளரோ, மகனோ, மார்க்கத்தை மறந்து மதிமருண் டிடின் அவர்தமை, இழுத்துவந்து, மதத் திலே சேருமின்! என்று, ஆரிய அணங்குகளுக்கு முன்ஷி யோசனை கூறினாராம். அதுமட்டுமா! பாஞ்சால மெனும் இப்பதியிலே, பார்ப்பன, ஆட வரும் பெண்டிரும், தேவபாஷையிலே இலயிக்காமல், ஆங்கிலமும், பிரன்சும் கற்றுஅவலமாகின்றனரே, அந்தோ என்னே இவர்தம் செயல், என்றுகூறி ஏங்கினாராம். விழிமின்! எழுமின்! உமது சக்தியை எங்கும் பரவிடப்பணிபுரிமின்! என்று கூறினாராம்! இதேபோது, பெர் லின் நகரிலே ஒருபேயன் அவனிமுழு தும் ஆரிய ஆதிக்கத்திலிருக்கவேண்டும். ஜெர்மானியர் ஆரியர், எனவே ஜெர் மானியரிடம் இந்த ஜெகமே சரணடைய வேண்டும் என்றுகூறுகிறான். அவனிட மாவது பீரங்கியும் கப்பலும், வீரரும் விமானமும் உண்டு! புராணமும் புரட்டும் புல்லும் செல்லரித்தஏடும் தவிர வேறோர் ஆயுதமுமின்றி, இங்கு, இன்னாளில், இவ் வளவு விழிப்பும், பகுத்தறிவும்மிளிர்ந்துங் கூட, முன்ஷி உலகை ஆரிய ஆதிக்கத் தின்கீழ் கொண்டு வருவேன் என்று பெருத்த குரலிலே பேசுகிறார், சக்திப் பொறியின் மகத்துவத்திலே நம்பிக்கை வைத்திருக்கிறார், இன்னமும் இந்தியர் ஆரியராவது திராவிடராவது, அவைகல் லாம் பழங்கதை, என்று கூறிக்கண்மூடிக் கொள்கின்றனர். அறிவே! அவரின் வழி யைத் திறவாயா?

பார்ப்பனர்களுக்கு இன்றைய நிலை யிலே, எதாவது வசதிக்குறைவு இருக்

திறதா, மாநாடுகூட்டி முழக்கமிட! ஒடுக்கப்பட்ட மக்கட்கு உரிமைதரமறுக்கும் இந்தத்தொங்கு வயிறினருக்கு எங்கும் ஏகபோக பிராசுஇருக்கும் இன்னுளிலே மாநாடு ஒருகேடா!! இந்துமார்க்கத்தைக் காப்பாற்றவும் இந்துக்களை இரட்சிக்கவும், நான்இருக்கிறேன் என்று சவர்க்கார் சல்லடம்கட்டுகிருர், ஆரிய சமாஜம் வேலைசெய்கிறது, பிரமசமஜாம்பணி புரிகிறது, இவ்வளவுஇருக்தும், பிராமணர்கள் தனியாகக்கூடித் தமது ஆதிக்கம் தழைக்கவேண்டுமென்று பேசுகின்றனர். அமிர்தசரசில்கூடிய பிராமணர் மாநாட்டுத்தலைவர், "வேதவேதாந்த ஞானத்தின் பாதுகாவலாகப் பிராமணர்களேஇருக்க உரிமை பெற்றவர்கள்" என்றுகூறினர். இந்த மாநாட்டுக்கான ஆதரவைச் சங்கராச்சாரியாரும் தந்தாராம். வேதவேதாந்த விற்பன்னர்களாக இருக்கும் உரிமை தமக்கேஉண்டு என்று விப்பிரர்கள் விளம்பட்டும், நமக்கு விசாரம் இல்லை, ஆனல், இது உண்மையானல், வேதமோதிக்கொண்டு, பாதசாரியாகிப், பர்ணசாலைகளிலேஇருந்துகொண்டு, பரலோகம்புகும் நேரத்தை எதிர்நோக்கி இருப்பதைவிட்டு, ஏன் மற்றத்துறைகளிலேபுகவேண்டும்? குளத்தங்கரைக் கொக்குகளாகவும், ஆற்றோர நாரைகளாகவும் இருப்பதற்கு அமிர்தசரசில் பார்ப்பனர்திட்டம் வகுத்திருந்தால் நமக்கு ஆயாசமில்லை! அனல் அங்குஅவர்கள் கூடியதும் பேசியதும், ஆரியகுலம் அவனியை ஆளவேண்டும் என்ற ஆணவத்தை வெளியிடவன்ருே! இது அடுக்குமா? உலகிலே வேறுஎங்கும் காணமுடியாத ஜாதி அகம்பாவம், இந்தியாவிலே இருக்கிறது. அங்கு குடியேற்ற நாட்டு அந்தஸ்துதந்தால், பார்ப்பன ஆட்சிதான் ஏற்பட்டுவிடும், என்று சென்றகிழமை இலண்டனில், பார்லிமெண்டிலே ஒருவர்பேசினர். நிலைமையை, நெடுந்தூரத்திலுள்ள ஒருவர்தெரிந்து பேசியிருக்கிருர், இங்கோ, நாள்தோறும் நேரடியாகவே, ஆரிய ஆதிக்கத்தைக்கண்டும் சிலர், இது ஒருபிரமாதமா என்று பேசுகின்றனர். இவர்களின்போக்கை என்னென்பது! இவ்விதமான தாசர்களின் தொகை குறையக்குறைய, முப்புரிகளின் சக்திப்பொறி பயனற்றுப்போகும், என்பதை உணர்ந்தே ஸ்ரீஜத் முன்ஷி, அமிர்தசரசிலே, கச்சையைவரிந்து கட்டுகிருர்!!

## பயங்கர விபத்து.

பம்பாயில்நேரிட்ட பயங்கர தீவிபத்தினல் சுமார் 100 கோடி ரூபாய் நஷ்டமாம். பல குடும்பங்கள் பரதவிக்கின்றன. காலையிலே இலட்சாதிபதியாக உலவிய பலர், மாலையிலே பிச்சைக்காரர் ஆகிவிட்டனராம். சேதமான இடத்தையும் காயமுற்ற மக்களையும் மே. த. வைசிராய் அவர்கள் பார்வை யிட்டார். நிவாரண வேலைக்காக நிதிதிரட்டப்படுகிறது. 10 இலட்சம் ரூபாய்வரை சேர்ந்திருக்கிறது.

# பார்வதி பி. ஏ;

3-ம் பக்கத்தொடர்ச்சி.

தலங்கக் காங்கிரஸ்வாதியாக இருப்பான் சிலகாலம், அந்தச் சமயத்திலே, பத்திரிகைகளிலே, பிரபல தலைவர்களின்போட்டோக்கள் வெளிவரும், அதிலே ஆறுமுகம் காணப்படுவான்.

"அடடே! ஆறுமுகம் இருக்கிருனே இந்தப்போட்டோவில், இவனை எப்படி ஜவர்ஹர்லால் கூட்டத்திலே சேர்த்தார்கள்?" என்று ஆறுமுகத்தைத் தெரிந்தவர்கள் ஆச்சரியப்படுவார்கள். அவர்களுக்கென்ன தெரியும், அவனுடைய தந்திரம்! போட்டோஎடுப்பவனுக்குத்துணை செய்பவன்போலக், கூட்டத்தை விலகு, விலகி நில் என்று சொல்லுவதும், சார்! லைட் சரியாக இருக்கிறதா? நாற்காலிகள் போதுமா? என்று வலியச்சென்றுகேட்டு அவனுக்கு உதவிபுரிவதுமாக இருப்பான். போட்டோ எடுப்பவர், ஆறுமுகம், பிரபலஸ்தர்களின் கூட்டத்தைச் சேர்ந்தவர் என்று எண்ணிக்கொள்வார். மரியாதை காட்டுவார். "சார்! நீங்கள் எல்லோரையும் உட்காரவைக்கிறீர்களே தவிர, உங்களுக்கு இடம்பார்த்துக்கொள்ளவில்லையே" என்று போட்டோக்காரர் உபசாரம் பேசுவார். "நமக்கென்ன சார்! இடமிருந்தாலும்சரி, இல்லாவிட்டாலும்சரி, வீட்டிலே இந்தப் போட்டோக்களை மாட்டிவைக்கக்கூட இடம் கிடையாது" என்று சொல்வான் ஒரு போடு, போட்டோக்காரன், ஆறுமுகமேதான், இந்தப் பிரபலகூட்டத்தின் அச்சு என்று நம்பும்படி. இதேநேரத்திலே போட்டோவுக்காக நிற்கும் பெரிய மனிதர்கள், போட்டோ எடுப்பவனிடம் மிகச் சகஜமாகப் பழகும் இவன், போட்டோ ஷாப் முதலாளியாக இருக்கவேண்டும் என்று எண்ணிக்கொண்டு, போட்டோவை நல்லதாக இருக்கும்படி அரும்பாடுபடுகிருன், இப்படித்தான் இருக்கவேண்டும் என்று மனதிலே ஆறுமுகத்தைப் பாராட்டிவிட்டு, "சார்! நீங்களும் போட்டோவிலே இருக்கவேண்டும்" என்று வற்புறுத்துவார்கள். அம்பக் ஆறுமுகம் வெற்றி நிச்சயம் என்பது தெரிந்ததும், கொஞ்சம் மறுத்துப் பார்ப்பான்; இதற்குள் போட்டோக்காரர் நல்ல இடமாகப் பார்த்து, அங்கே ஆறுமுகத்தை நிற்கச்செய்வார். இப்படித் தந்திரம் செய்து, அம்பக் ஆறுமுகம் போட்டோவிலே இடம்பெற்றதை மறுதினம் பத்திரிகையிலே படத்தைக் காண்பவர்கள் அறியவா போகிருர்கள்! ஆறுமுகம் எப்படியோ பெரிய மனிதர்களை எல்லாம் தனது வலையிலே போட்டுக்கொள்கிறன், என்றுகூறுவர். ஒருசிலருக்கு அவனிடம், உண்மையிலேஒருதுளி மதிப்பும் கிடையாது என்றபோதிலும், ஒப்புக்காவது, அவனை மதிப்பதுபோலக் காட்டிக்கொள்வர். இப்படியே ஆறுமுகத்தின் அன்ருட வாழ்க்கை இருக்கும். ஆறுமுகம் காங்கிரஸ் வேடத்திலே காட்சி தரும் வேளையிலே, மற்றக் கட்சிகளை அவன் தனது கால் தூசுக்குச் சமமாகக் கூடக் கருதாதவன்போலக் காணப்படுவான். சுயராச்சியம் பெருமுன்பு, தூங்க இஷ்டமில்லாதவன்போல நடித்துக்காட்டுவான். எதிர்க் கட்சியிலே எவ்வளவு பெரிய மனிதர், குணவான் இருப்பினும் எடுத்தேன் கவிழ்த்தேன் என்ற முறையிலே பேசுவான், ஏசுவான். "அந்தத் திவான் பகதூரின் குடலைப்பிடுங்கிப் பாரதமாதாவின் கழுத்திற்கு மாலையாகப் போடாமுன்பு, என்பூஜைநிறைவேருது" என்று பேசுவான். "மகாத்மா காந்தி என்னை ஒருநாள் தனியாக அழைத்து, ஆறுமுகம், பெங்களூரைப் பொறுத்தவரையில் நான் உன்னைத்தான் பரிபூரணமாக நம்பிக்கொண்டிருக்கிறேன் என்று சொன்னர். எனக்கு மகாத்மாவின்பேச்சு உடலையே சிலிர்க்கச்செய்தது. மகாப்பிரபோ! நான் பரம தரித்திரனுயிற்றே, என்னல் என்னசெய்ய முடியும்? என்று மகாத்மாவைக் கேட்டேன். தம்முடைய மோகனப் புன்னகையுடன், மகாத்மா, ஆறுமுகம்! அன்னை பாரததேவி, அஷ்ட ஐஸ்வரியத்தைக் கேட்கமாட்டாள், உன் போன்ற ஏழையின் அன்புதான்அவளுக்கு வேண்டும் என்று கூறினர். என் கண்களிலே தாரைதாரையாகக் கண்ணீர் பெருகிற்று, நான் தேசிய மூலமந்திர உபதேசம் பெற்றேன்" என்று பிரசங்கம்புரிவான். மகாத்மாவைக் கண்டே இருக்கமாட்டான், அவருடைய தோட்டக்காரனிடங்கூடப் பேசியிருக்கமாட்டான், விசித்திரமான தீடீர்வேட்டு விடுவதிலே அம்பக் ஆறுமுகம், பெரிய பேர்வழி! இந்தச் சூதுக்காரனிடம் அவ்வப்போது, எவ்வளவோ நல்லவர்கள் சிக்கிச் சீரழிந்ததுண்டு. அவனுடைய சூதைத் தெரிந்துகொண்டுசிலர் அவனுடைய கூட்டுறவை விலக்குவதற்குள் வேறுசிலரைத் தனது பலிபீடத்துக்கு அழைத்துக்கொள்ளும் வழி ஆறுமுகத்துக்குத் தெரியும். "இப்போது நினைத்தால்கூட வருத்தமாகத்தான் இருக்கிறது என்ன செய்வது, நான் மகாப்பாபி, இனத்துரோகி, பார்ப்பனரல்லாதாருக்குத் தீங்கு செய்துவிட்டேன். எங்கள் வீட்டுத் தோட்டத்திலே சர். தியாகராயர் உலவினர் என்று கூறுகிருர்கள். குடும்பம் முன்னுக்கு வந்ததே ஜஸ்டிஸ் கட்சியால்தானும், அந்தக்கட்சிக்கே கேடு செய்துவிட்டேன், பார்ப்பனர்பேச்சைக்கேட்டு" என்று உருக்கமாகப்பேசி, ஏமாந்த சோணகிரிகளை வலையிலேபோடுவான், மெள்ளமெள்ளஜஸ்டிஸ்கட்சித்தலைவர்களுடன் பழக ஆரம்பிப்பான். அழையாமலேயே அவர்கள் கூட்டங்களிலே நுழைவான், ஆதரவுகாட்டுவான். காங்கிரசில்பெற்ற அனுபவத்தைக்கொண்டுசில யோசனை கூறுகிறேன் என்று மெதுவாகத்தன்து தொழிலைத் துவக்குவான். பக்குவமாக நடந்து சிலநாட்களுக்குள், எலக்ஷனுக்கு ஆள்பொறுக்குவது முதற்கொண்டு, எப்படிச்சட்டசபையிலேபேச

(6ம்பக்கம் பார்க்க)

# பார்வதி பி, ஏ;

5ம் பக்கத் தொடர்ச்சி.

வேண்டும் என்பதுவரையிலே, யோசனை கூறுபவனுகிப், பங்களாக்களிலே உலவுவான், மோட்டாரிலே சவாரிசெய்வான், தோட்டக் கச்சேரிகளிலே துரைமகன் போலக் காட்சியளிப்பான். கதர்சட்டை போன இடம் தெரியாது, காந்திமகாத்து மாவைச் சட்டை செய்யவும்மாட்டான். ஜஸ்டிஸ்புலிஎன்று தன்னைத்தானேகூறிக் கொள்வான். அந்த வயலிலே மேய்ந்தாலும், இந்துமதத்தின்மீது அபாரமான அக்கரை ஏற்பட்டுவிடும், என்ன இருந்தாலும் இஸ்லாமியருக்கு இடந்தரக்கூடாதல்லவா, என்று பேசுவான், இந்துஸ்தான் இந்துக்களுத்குத்தானே என்று கூறுவான், இந்த வேட்டையும் பயனற்றுப்போன பிறகுதான், அம்பக்ஆறுமுகம் தொழிலாளர் தலைவனுன். அடிக்கடி குத்துச் சண்டை சங்கீதக் கச்சேரி, எலக்ஷன் நோட்டீஸ், நாடகச் செய்தி முதலியனவற்றைத் துண்டு நோட்டீசுகள் மூலம் வெளியிடவேண்டி இருந்ததால், வேலையே கிடைக்காமல் திண்டாடிக்கொண்டிருந்த ஒருஅச்சுக்கூடத்தோழனை நண்பனுக்கிக் கொண்டிருந்தான். அந்த ஒரு தொடர்பேபோதும் அச்சுத்தொழிலாளர் மாநாடு நடத்த என்று எண்ணினுன், அந்த முயற்சிக்கும் அவனை ஆதரிக்க ஆள் கிடைக்காமல் போகவில்லை,

"ஆறுகோடி ரூபாய் சார், ஆலாலசுந்தாருக்குச் சொத்து. பெரிய தனவான், தமிழ்நாட்டிலே அவர் பெயர் தெரியாத ஆளே கிடையாது" என்று பெங்களூரில் உள்ள பஜனைக்கூடங்கள், பழுதான கோயில் தர்மகர்த்தாக்கள், அன்னதான சமாஜங்கள் ஆகிய இடங்களிலெல்லாம், ஆறுமுகம் முதலிலே விளம்பரம் செய்தான். அவருடைய விஜயத்துக்கு எதிர்பாருங்கள் என்று முதலிலே ஒரு சிறு விளம்பரம் வெளியிட்டான், மார்க்கட் நிலவரத்தைப் பார்க்க. நோட்டீஸ்வெளி வந்த இரண்டுநாட்களுக்குள், பண்டரி பஜனைக்கூடத்தலைவரும், பராசக்தி ஆலயப்பணியாளர் அடிமை ஆனந்தரும், மச்சிப்பிள்ளையார் மடத்துத் தலைவரும், மாகாளிகோயில் பூஜாரியும், சாயிபாபா பஜனைக்கூடச் சர்வாதிகாரியும், சமரச சன்மார்க்க சங்கத்தலைவரும் பிறருமாக அம்பக் ஆறுமுகத்தைச் சூழ்ந்துகொண்டனர், அந்தக் கோடீஸ்வாரை எப்படியாவது பெங்களூருக்கு வரவழைக்க வேண்டும், அவர்மூலமாகத்தான் நமது குறைகள் எல்லாம் தீர்க்கப்படவேண்டும் என்று கெஞ்சிக்கொண்டனர். "ஆலாலசுந்தரர் பெங்களூர் வந்துபோவதென்றால் சாமான்யமானகாரியமல்ல, 'வந்தாரோ, மளமளவென, இரண்டு மூன்று இலட்சம் தர்ம காரியத்துக்குத் தந்துவிட்டுத்தான் போவார். அவருடைய சேவை நமது பெங்களூருக்குக் கிடைக்க வேண்டும், கிடைத்தால் போதும்" என்றுபேசி மேலும், அந்தப் பூஜைப்புனஸ்காரக்கிலே நீர்வார்ச்செய்துவிட்டான். அதற்கு மேல், "ஆறுமுகம்! எப்படியாவதுஆலால சுந்தரரை வரவழைத்தாகவேண்டும்,அதற்காக நூறோ ஐம்பதோ செலவானுலும் நாங்கள் ஆளுக்குக் கொஞ்சம் தரச்சித்தமாக இருக்கிறோம்" என்று பேரமேபேசி விட்டனர், மடம் மகோற்சவம், பூஜை பஜனை என்றபெயர் கூறிப் பொருள் தேடும் கபடர்கள், இவர்களை ஏய்க்கஆறுமுகததுக்குத் தெரியுமல்லவா! எனவே, "சரி! ஆலாலசுந்தாருக்கு நீங்கள்யாவரும் மிக்கமரியாதையோடு ஒரு அழைப்பு எழுதிக்கொடுங்கள். அதனைநான் அவருக்கு அனுப்புகிறேன். இங்கு அவசியம் வரவேண்டும் என்று நானும ஒரு கடிதம் அதனுடன் சேர்த்து அனுப்பிவைக்கிறேன்என்று யோசனை கூறினுன். இந்தத் தந்திரத்தின் பயனுகப், பதினைந்து பஜனைக்கூடங்கள், பத்துப்பழய கோயில்கள், பனிரண்டு மடங்கள் ஆகிய இவ்வளவு ஸ்தாபனங்களின் பெயரால் ஒருஅழைப்பு ஆலாலசுந்தரருக்கு அனுப்பப்பட்டது. இந்த அழைப்பைக் கண்டதும், ஆலாலசுந்தரர் திடுக்கிட்டுப்போனுர், எப்படித் தனக்குப் பணம் இருக்கிறவிஷயம் பெங்களூர்வரை பரவிவிட்டது என்று எண்ணிப் பயந்தார்.

அம்பக் ஆறுமுகமோ, தினமும் ஒரு கடிதம் எழுதிக்கொண்டிருந்தான். சன்மார்க்க மாநாடுகூட்டுகிறோம், சமரச ஞான மாநாடு நடத்தப்போகிறோம். மெய்ஞ்ஞானமாநாடுநடத்தஇருக்கிறோம் ஆஸ்திகமாநாடு நடத்தப்போகிறோம்,ஆலயப்பணியாளர் மாநாடு நடத்துகிறோம், என்று விதவிதமான வலைவீசியபடியிருந்தான். கடைசியாகஆலாலசுந்தரர்,தனக்கு மாநாடு, பொதுக்கூட்டம் ஆகிய விஷயங்களில் அக்கரை கிடையாதென்றும், பார்த்திபனுக்கு எழுதினுல் அவன் வரக்கூடுமென்றும், ஆறுமுகத்துக்குத் தபால் எழுதினுர். மற்றவர்கள், தமக்கு இதுஒரு தோல்வி என்று எண்ணிக்கொள்வர், ஆறுமுகம் அப்படிப்பட்டவனல்ல, ஒரு ஆசாமிக்கு இரண்டு ஆள் கிக்கினுர்கள் என்று பூரித்தான். பார்த்திபனின் விலாசம், ஆலாலசுந்தராரால் தரப்பட்டதால், "ரட்சகன்" ஆபீசுக்குத் தபால்களை ஏவலானுன். ஆலாலசுந்தரர்போலப், பார்த்திபன் இந்தக் கடிதங்கட்கு அக்கரைகாட்டாமலிருந்துவிடவில்லை, ஆலாலசுந்தரரையும் அழைத்துவருவதாக உறுதிகூறிவிட்டு மாநாடுபோடுவதற்குப் பதிலாகத் தொழிலாளர் மாநாடு நடத்தவேண்டுமென்று யோசனை கூறினுன். ஆறுமுகத்திற்கு என்ன, பஜனைக்கூடத்தின்மீது பிறந்த அன்பு, தொழிலாளரிடம் ஏற்படாமல் போகுமா! சரி, என்று பார்த்திபனுக்குத் தந்திபறந்தது, அடுத்த்வாரத்திலேயே அச்சுத்தொழிலாளர் மாநாட்டின் வேலை ஆரம்பமாகிவிட்டது,

ஆலாலசுந்தரர், எப்படி ஆறுமுகத்துக்குத் தெரிந்தவரானுர் என்பதும் ஒரு விசித்திரந்தான். கலாரசிகர் கனகசபேசர், ஆலாலசுந்தரரின் அருங்குணத்தைப் பற்றி ஒரு அரிய கவிதை இயற்றினுர், கலிகாலக் கர்ணனென்றும்,துணனுக்கு அண்ணனென்றும் ஆலாலசுந்தரரை வர்ணித்து எழுதினுர். ஆலாலசுந்தரரின் லோபித்தனத்துக்கும், கனகசபேசரின் லோபித்தனத்துக்கும், கனகசபேசரின் கவிதைக்கும் மடுவுக்கும் மலைக்குமுள்ள வித்யாசந்தான், என்றுலும், அவருடைய கலை உள்ளம், உள்ளத்தை மேடாகவும், லோபியைத்தர்மவானுகவும், கண்டது! அந்த உரிமை கலைவாணர்களுக்கு உண்டல்லவா? இந்தக் கவிதையைப் பெங்களூர்த்தமிழ்ப்பண்டிதர் ஒருவர்படித்தார், அவர், கோயிலிலே நடத்திய புராணப் பிரசங்கத்திலே பழயகால தர்மவான்கள் போல இந்தக்காலத்திலும் ஒருவர் இருவர் இல்லாமலா பொழுதுவிடிகிறது என்றுகூறித், தமதுகூற்றுக்குமேற்கோள் காட்டிக் கனகசபேசரின் கவிதையைப் பாடிப் பதம்பிரித்து விரிவுரை நிகழ்த்தினுர். இதன்மூலமாகத்தான் அம்பக் ஆறுமுகம், ஆலாலசுந்தரரைப்பற்றிக் கேள்விப்பட்டது. கவிதை அழகாக இருந்ததே தவிர, உண்மையில் ஆலாலசுந்தரர் ஒரு லோபி என்பது அம்பக் ஆறுமுகத்துக்குத் தெரியாது! பார்த்திபனுக்குமட்டுமென்ன ஆறுமுகம் ஒரு அம்பக்பேர்வழி என்பது தெரியுமா! மணல் மூட்டைக்காரன் ஏமாற்றிய கதை கேள்விப்பட்டதில்லையா? அதுபோலத்தான் இது.

(தொடரும்)

---

## துறையூர் வாலிபர் கழகம்,

### பம்பாய்.

---

27—2—44 ஞாயிற்றுக்கிழமை முதலாண்டு பூர்த்தி விழா, பம்பாய், தாராவி வாழக்கட்டவாடி மெத்தையில் இரவு 8½ மணி அளவில் திருநெல்வேலி ஜில்லா, மகாஜன சங்கம், இலங்கை கௌரவ செயலாளர் தே. ஞானப்பிரகாசம் அவர்களது தலைமையில் நடைபெற்றது. தலைவர் முன்னுரைக்குப்பின் பம்பாய் ஆ. தி. வா. க. கௌரவ செயலாளர் K. பாலகிருஷ்ணன் அவர்கள், பெரியார் சேவை நமது கடமை என்னும் பொருள்பற்றி உபன்யாசம்செய்து பெரியார் ஈ.வெ.ரா. அவர்களின் திருவுருவப்படத்தைத்திறந்து வைத்தார். தோழர்ஜோசப்ஜியார்ஜ் அவர்கள் ஆரியர்கொடுமைபற்றிப் பேசினுர். தலைவருக்கு வரவேற்பு இதழ் வாசிக்கப்பட்டது. க. ஆத்தியப்பா அவர்களால் கடந்தவருட வரவுசெலவுக்கணக்கு வாசிக்கப்பட்டுத் திராவிடநாடு, தென்றல் வளர்ச்சிக்கு முறையே ரூபா 1. வழங்கப்பட்டது. 11—மணிக்கு வந்தனோபசாரம் கூறக்கூட்டம் முடிவுற்றது.

## குஞ்சிதம் குருசாமி தலைமை உரை.

2ம் பக்கத் தொடர்ச்சி.

ஒரேஒரு ஜாதியாரை மட்டும் மேலும் மேலும் பணக்காரர்களாகவும், படித்தவர்களாகவும் ஆக்கிக்கொண்டிருக்கின்றனவோ, அதேமாதிரி ஒரேஒருசமுகத்தின் பெண்களை மட்டும் இழிவுபடுத்தி விட்டன; இழிவு படுத்தி வருகின்றன. உலகில் எந்தத் தொழிலிலும் இழிவு என்பது கிடையாது என்பதே என்கருத்து. சோம்பேரித்தனம் ஒன்றுதான் இழிவு. மானத்தையும் உடலையும் பணத்திற்காகவோ, மதத்திற்காகவோ, கடவுளுக்காகவோ, பழக்க வழக்கத்திற்காகவோ, விற்பது அதைவிடப் பெரிய இழிவு. இசை வேளாள சமுகத்தின் ஆண்கள் பலவித சங்கீதத் துறைகளில் பெயர்பெற்று விளங்குகிறார்கள். ஆனால் பிறரிடம் ஏன் இவ்வளவு தலைகுனிந்து, வாய்பொத்தி, "தரையைக் கௌவி ஆமையைப்போலே அடங்கி ஒடுங்கி" மானமிழந்து வாழ வேண்டும் என்பதை மட்டும் நீங்கள் சிறிது யோசித்துப்பார்க்கவேண்டுமென்பதே எனது வேண்டுகோள்.

"தோளை உயர்த்து சுடர்முகம்
தூக்கு!
மீசையை முறுக்கி மேலே எற்று!
விழித்த விழியில் மேதினிக்கு
ஒளிசெய்!
நகைப்பை முழக்கு! நடத்து
லோகத்தை!"

என்று நமது புரட்சிக் கவி, கனகசுப்புரத்தினம் (புதுவை பாரதிதாசன்) வீரமுழக்கம் செய்வதை நம் சமுக ஆண்மக்கள் முக்கியமாகக் கவனிக்கவேண்டும் என்பது எனது விருப்பம். "நாம்எவருக்கும்தாழ்ந்தவரல்லர்; உயர்ந்தவர்களுமல்லர். நாமும் மனிதர்; நாற்கால் பிராணிகளல்ல" என்ற உணர்ச்சி நம் ஒவ்வொருவருக்கும் வரவேண்டும். இவ்வித உணர்ச்சி நம்முள் இரண்டொரு பெரிய வித்வான்களுக்கு மட்டுந்தான் ஏற்பட்டிருக்கிறது. கிராமத்திலோ, நகரத்திலோ, இருக்கும் ஒவ்வொருவரும், தம்மைக் கீழானவர் என்றோ, இழி தொழில் செய்கிறவரென்றோ, தாழ்ந்த வகுப்பாரென்றோ, ஆரியத்திற்கு அடிமையாகப் பிறக்கப்பட்டவரென்றோ, கருதிக்கொண்டிருக்கும் மனப்பான்மை அடியோடு ஒழியவேண்டும். தன்மானம் பெரிதே யொழியச் சாண்வயிறு பெரிதல்ல. வண்மைபெரிதே யொழிய வழக்கம் பெரிதல்ல.

### தனி ஜாதி ஏன்?

இந்த உணர்ச்சி ஏற்பட்டு நாமும்மனிதர்களாய் வாழவேண்டுமானால். நம் சமுகத்தில் ஆண், பெண் அனைவரும் 100க்கு 100-பேர் கல்வி கற்கவேண்டும். கல்வி என்றால் எழுதப்படிக்க மட்டும் தெரிவதல்ல. உலகத்தை அறியும் உயர்தரக்கல்வி வேண்டும். நம் சமுகம் முன்னேறிக் கொண்டுதானிருக்கிறது. தமிழ் நாட்டில் ஒப்பற்ற ஒருகவியைக்கொடுத்திருக்கிறது; இணையற்ற எழுத்தாளரைக்கொடுத்திருக்கிறது; ஈடில்லாச்சொற்பொழிவாளர்களை அளித்திருக்கிறது; ஒப்புயர்வற்ற புலவர்களை உண்டாக்கியிருக்கிறது. ஈடற்ற சங்கீத வித்வான்களைக் கொடுத்திருக்கிறது. ஆனால், இவை எல்லாம் எம்மாத்திரம்? ஆரியத்தை ஓட்டுவது முதல் ஆகாயவிமானம் ஓட்டுவது வரையில் உள்ள ஒவ்வொரு பெருமுயற்சியிலும் நம் சமுகத்தார் அனைவரும் ஈடுபடவேண்டும். டாக்டர்கள்; ஆசிரியர்கள்; அரசியல்வாதிகள்; வியாபாரிகள்; பத்திராசிரியர்கள்; புலவர்கள்; என்ஜினியர்கள்; இராணுவ வீரர்கள்; முதலிய பல வேலைகளுக்கும் நம்மவர்கள் செல்லவேண்டும். ஆடல் பாடல்களைச் சுயமாக விரும்பும் இரண்டொருவர் தவிர மற்றப்பெண்கள் யாவரும் குறைந்தது பத்தாவது வரையிலாவது படிக்கவேண்டும். ஆண்கள்தாம் இதற்கு உற்ற துணையாயிருந்து உதவிபுரியவேண்டும். இவ்வாறு பல்வேறு தொழில்களையும், ஏற்றுக்கொள்வதன் மூலம் குலத்தொழில் என்று கருதப்பட்டிருக்கும் சங்கீதம், ஆட்டம் முதலியவைகள் நசித்துப்போகுமே என்று சிலர் கேட்கலாம். அதனால் ஒன்றும் மோசம் ஏற்பட்டுவிடாது என்பதே எனது பதில். இப்போது எல்லா வகுப்பினருமே ஆடவும் பாடவும் ஆரம்பித்துவிட்டனர். எந்த ஒரு ஜாதியார் நம்பெண்களைக் கோவில்களிலும், கூட்டங்களிலும், தெருக்களிலும், ஆடவிட்டு, ஆயிரக்கணக்கான ஆண்டுகளாய் வேடிக்கைப்பார்த்தும், ஏளனம்செய்தும் வருகிறார்களோ, அதே ஜாதிப்பெண்கள் இன்று ஆட ஆரம்பித்துவிட்டார்கள். ஆதலால் ஆடல் பாடல்களுக்குத் தனி ஜாதியோ, சமுகமோ, இனிவேண்டிய தில்லை. இனி இருக்கவும்முடியாது. டாக்டர் ஜாதி, வக்கீல் ஜாதி, உபாத்தியாயர் ஜாதி, என்ஜீனியர்ஜாதி, போலீஸ்காரர் ஜாதி, என்று இம்மாதிரித்தொழில்களுக்கெல்லாம் தனித்தனி ஜாதியா இருக்கிறது? அப்படியானால் ஆடல், பாடல்களுக்குமட்டும் தனிமையான ஒருபிரிவு—ஒரு கூட்டம்—இருக்கவேண்டியது அவசியந்தானா என்பதை நீங்களே யோசித்து முடிவுகட்டுங்கள்.

### நம் பெண்கள்.

நம் வகுப்புப் பெண்கள் சிறந்த அறிவாளிகள் என்பது எனது அநுபவம். நாட்டில் ஏதாவது புதிய முறை (Fashion) இருக்குமானால் அதைமுதன் முதல் உண்டாக்குகிறவர்கள் இசை வேளாளப் பெண்களேயாவர். இவர்களைப்பார்த்துதான் இதர பெண்கள் காப்பியடிக்கின்றனர். ஆரிய அடிமைத்தனத்தைமட்டும் உதைத்துத் தள்ளுவதற்கு நம் பெண்கள் துணிந்துவிடுவார்களேயானால், பிறகு இவர்களை மிஞ்சக்கூடிய பெண்கள் இந்நாட்டில் இருக்கவே முடியாது என்பது என் எண்ணம். ஆதலால், நம் பெண்களுக்கு உயர்ந்த கல்வியை அளிக்குமாறு உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். ஆண்களும் சகல துறைகளிலும் முன்னேறும்படியான கல்வி முறைகளைக்கற்று உலக மக்களுடன் சரிநிகர் சமானமாகநின்று தன் மதிப்புடனும் வீரத்துடனும், வாழவேண்டுமென்பதே எனது விருப்பம். எனவே, இன்று முதலேநாம் இவ்விஷயத்தில் நமதுமுழுக் கவனத்தையும் செலுத்தித் தீவிரமாய் உழைக்கவேண்டியது அவசியமாகும்.

இறுதியாகத், தோழர்களே! நம் சமுகத்தைஇனிச்சாதாரணமாய்ச்சீர்திருத்த முடியாது. தமிழர் சமுதாயத்தில் எப்படிச்சகலஜாதிகளும் ஒழிந்து ஒரே திராவிட இனமாகஇருந்து தனி உரிமைநாடு பெற்று வாழவேண்டுமென்பதே நமது இலட்சியம் என்று கருதியிருக்கிறோமோ, அதே மாதிரி, இந்தச் சமுகத்திலும் தலைகீழான புரட்சி ஏற்பட்டாலொழிய நாம் முன்னேறுவது 'குதிரைக் கொம்பு' தான் என்பதே எனது துணிவான, முடிவான எண்ணம். நான் இதுவரையில் கூறியவற்றுள் ஏதேனும் உங்களுடைய கருத்துக்கு மாறுபட்டவை இருக்கலாம். கடுமையான நோய்க்கு ஊசிமூலம்தானே மருந்தைச் செலுத்தவேண்டும்?

இன்னும் எவ்வளவோ விஷயங்கள் சொல்லவேண்டுமென்பது எனது பேரவா. ஆனால் அவ்வளவையும் இச்சிறு தலைமையுரையில் கூறமுடியாமலிருப்பதற்குப் பெரிதும் வருந்துகிறேன்.

என்னுடைய கருத்துகளைத் தங்கள் எல்லோருக்கும் தெரிவித்துக்கொள்வதற்கு வாய்ப்புக்கிடைத்ததுபற்றி மகிழ்ச்சியடைகிறேன். இந்த வாய்ப்பை எனக்கு அளித்த உங்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றி உரியதாகுக.

---

## இன்னல் ஆற்றல்.

சிதம்பரத்தை அடுத்த அம்மாபேட்டையில், தமிழ்ப்புலவர் தோழர். சிங்காரவேல் அவர்களின் தயார் மாணிக்கத்தம்மையார் 2-வாரமுன் மறைந்தமைபற்றி 14—3—44 காலை 9மணிக்கு அக்குடும்பத்தாருக்கு இன்னல் ஆற்ற, நண்பர் உறவினராய்ப் பலர் குழுமினர். சிதம்பரம் நகர உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர் தோழர். கா. மு. மாணிக்கம் அவர்கள் தலைமை வகித்துச், சொற்பொழிவால் ஆறுதல் கூறியதோடு புலவர்தோழர் முருகேசனார், அசுப்பூர் தோழர் பூவராகன், தில்லை மணவழகனார். இன்னும் சிலரும், கருமாதி என்றும் பலவேறு தருணங்களிலும், நாம் ஆரியப் பார்ப்பானுக்குப் பொருள் தருவது அறிவுடைமையாகாது. நம் தமிழினத்தாரின் மானத்தைக்குலைப்பதாயும், ஆரிய ஆதிக்கத்துக்குத் துணைபுரிவதாயுமாகிறது என்றறிந்தே ஆங்காங்கு இவ்விதம் தமிழர் தன்மானமுறைகள் கையாளப்படுகிறது, என்று பேசினார்கள். பகல் 1-மணிக்கு அனைவருக்கும் சமநிலை உணவு அளிக்கப்பட்டுப்பின் குழுவினர் கலைந்தனர்.

# சிறந்த முறை.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பும் சீரிய சூழ்ச்சியா! கருதுமின். இன்றும் நந்தமிழ் மகன் இரத்தல் எனுஞ் சொல்லைச் சொல்லுதலே இழிவெனக் கொண்டு, "வேளாளன்வாயில் வேட்பக் கூறி" என, அப்பொருள்பட வேற்றுச் சொல்லாற் கூறுகின்றான். அதனைப்பின்பற்றிய ஆரியர் இன்று யான் தங்களை இவ்வளவு கொடுங்கள், என்று கூறமாட்டேன்; தங்கள்வள்ளற்றன்மையாற்பெறுவதே என்குடிவாழுமியல்பினைப்பெறும் என்று கூறுகின்றனர். அதனைப் பொன்மொழியெனப் போற்றும் புலவோர்களை (புலமை-அறிவு) என்னென்றுகூறுவோம், போற்றுவதோடு அன்னார்கூறும்பொருள்களுக்கு அதிகமாகவே, அழைத்துக்கொடுவந்து தருகின்றனர். இன்னோர்செயலை நினைக்குங்காலை மருட்கையுடைத்தாயிருக்கின்றது. உள்ளுங்காலை உள்ளஞ்சுடுகின்றது. நினையாதிருப்பின் நம்நிலையில் நிற்பதில்லை. ஆனால் ஒன்றுகூறி அமைதிபெறலாம்ஆரியத்தின்மீதுற்றஅளவில்காதலால் இங்ஙனஞ்செய்கின்றனரென்பதும், வள்ளுவர் சாற்றும் அறிவின்நிலையினைப்பெற்றாரில்லை என்பதுமேயாம். இக்கருத்தினை யான் ஒருசங்க செய்யுளிற்கண்டு மகிழ்வுறலானேன். அஃது,

"உள்ளத்தின் உள்ளஞ் சுடுமே
உள்ளாதிருப்பின் எம் மளவைத் தன்றே
வான்றோய் வற்றே காமம்
சான்றோரல்லர்யாம் மரீஇயோரே"

என்பது. ஆயின் இச்செய்யுள் இந்நிலையுற்றதே எனஇரங்குவார்பலருளர். அதனைப் பொருட்படுத்தும் பண்பின்மைக்கு வருந்துகின்றேன். இங்ஙனம் இச்செய்யுள் பொருள்பயக்குமோ எனவினவுவாருளரானால், அன்னாருக்கு மாற்றம் பகரும்ஆற்றல் நம்போன்ற இளைஞருக்கு உளதென உரைப்பதில் புகழ்ச்சியொன்றுமிராது. எனவே இவைபோன்றசெயல்பலவற்றை ஆரியர் தமக்கெனக்கொண்டு சீரியவாழ்க்கை நடத்துகின்றார்களெனின் அன்னாரின் திறம்படப்புரியும் செயலினை வியப்பதன்றிவேறு என்செய வல்லீர்.

இனி இம்மட்டோடு நில்லாமல் நூல்களில் வேறுபாடு கொள்ளுங்காலும், பலப்பல இன்னாச்செயல்கள் இலங்கித் தோன்றுகின்றன. அதன்கண்ணும் ஆரியத்தின் இழிசேயலை நீக்குவதற்காக நம்மனோர் அச்செயல்புரிவரெனின், அஃது ஆரியத்தில் ஊறிய காரியத்தாலென்க. அஃது தொல்காப்பியத்து, மெய்ப்பாட்டியலில் நகைச்சுவை கூறவந்தவர்கள் நகைக்குமுதல் கனிலுங்காலை முதற்கண் ஆரியர்கூறுந் தமிழின் கண்ணும் என்பதை மொழிவாராயினர். ஆயின் அதனைப் பதிப்பித்தவர், ஆரியர் என்பதனை அறியார் எனத்திருத்தி, பாடவேறுபாடு காண்பாராயினர். அவ்வளம்தந்தது எட்டுச் சுவடிஎன எடுத்தியம்புவர். எங்ஙனமாயினும், ஆகுக. ஆரியர் அறைவதில் நகைதோன்றுமா! அறியார் கூறுந்தமிழில் நகைதோன்றுமா? என்று நீங்களே உசாவுங்கள். அறியார்கூறுவதில் இரக்கந்தோன்றி அமைதிகொள்வரன்றி நகைகொள்ளார் கேட்போர். பாடவேறுபாடு காண்பதிலும் இந்நிலையுற்றோமெனின் இனி எந்நிலையுறுவோம் என ஓர்மின்.

திராவிடஇளைஞர்களே, இதுகாறுங் கூறியவாற்றால் ஆரியத்தினியல் பொதுப் பண்பாக இன்னவெனத்தோன்றலாயிற்று. நாம் எப்பொருளைக் காணினும் மெய்ப்பொருள் யாதென அறிய அவா எழவேண்டும். ஒருவர் கொண்டது ஒரு காலத்துப் பொருத்தமின்றித் தோன்றலாம். அதனால் தவறுடைய வழியிற்செல்லுகின்றோமென்பதின்று. அங்ஙனம் நோக்குங்கால் தமிழர்களின் தனிப்பண்புகள் யாவை என்நோக்கவேண்டும். நோக்கியபின் அவை இக்காலைமாறி நிற்குங் காரணமறிய மூற்படவேண்டும். முற்படுங்கால் உரையினைச்சான்றாகக்கொள்ளாது இலக்கியங்களையே இலக்காகக் கொள்ள வேண்டும். கொள்ளுங்கால் காலத்தோடு பட்டுப்பகர்வனயாவையெனத் தெளிந்து தணிதல் வேண்டும். தெளியுங்காலை வேற்றுக்கொள்கைகள் வருதற்குரிய முதலையும் காணவேண்டும்.கண்டுஅவற்றைவேரோடு [illegible] முற்படவேண்டும், முற்படுதலோடு இனத்தையும் முற்படும்படி செய்யவேண்டும். அன்றுதான் தமிழன் தனிப்பண்புடையவன், அப்பண்புடையவர்களே திராவிடர்கள் என்அறியப்படும். ஆதலின்வீரஇளைஞர்களேஎழுச்சிபெற்று உணர்ச்சியுற்று அடிமையகற்றி வீரவாழ்வுற இன்றே மலர் மலர்ச்சியுறுகின்றது. அம்மலருக்குரிய இளைஞர்களே, அம்மலர் காய்த்துப், பழுத்துப்பழம்பெறும் காலம் எதிர்காலத்திலுள்ளது.எழுச்சியுற்று முன்வருமாறு அழைக்கின்றேன்.

'திராவிடம் வாழ்க'

——

## ஆகின்லெக், ஜின்னா சந்திப்பு.

இந்தியப் படைத்தலைவர் சர். ஆகின்லெக்,ஜனாப்ஜின்னாஅவர்களைச்சந்தித்துப் பேசினார். இது சாதாரணமாக மரியாதைக்காகச் செய்யப்பட்டதா, அல்லது இருபிரமுகர்களின் சந்திப்பு, அரசியல் பிரச்னைபற்றி ஏற்பட்டதா என்பது குறித்துப் பத்திரிகை நிருபர்கள் எதும் கூறவில்லை.

# கம்பர் மாநாடு

## நடத்தியவர்களின் யோக்கியதை.

### தலைவரைக் கைவிட்டனர்!

(ஒரு நிருபர்)

16—4—44ல் சென்னை கோகலே மண்டபத்தில் நடைபெற்ற கம்பர்மாநாடு குழப்பத்தில் முடிந்ததை யாவரும் உணர்வர். அதைவிட மோசமானதும் வருந்தத்தக்கதுமான செய்திஎன்னவென்றால், மகாநாட்டுத் தலைவர் மகாமகோபாத்தியாய பண்டிதமணி கதிரேசச் செட்டியாரை மகாநாடு நடத்தியவர் கைவிட்டுவிட்டதுதான். மகாநாடு முடிந்தவுடனே பண்டிதமணி வெளியேவந்தார். ஆனால்அவரை அழைத்துச்செல்ல ஒருவரும்காணப்படவில்லை. வரவேற்புக்கழகத்தலைவரையும் காணோம். காரியதரிசியையும் காணோம். கலைவள்ளலையும் காணோம். இவ்வாறு இவர் தனியே, கவனிக்கப்படாமல்தெருவில் நின்றுகொண்டிருந்ததை, மகாநாடு நடத்துவதில் சம்பந்தப்படாத ஒரு கனவான் கண்டு, டாக்விகார் ஒன்றை வரவழைத்து அதில் உட்காரவைத்து அனுப்பினார். உச்சிக்குடுமிப்பார்ப்பனர் ஒருவர் பண்டித மணியுடன் இருந்தார். இவ்வாறு, வெளியூரிலிருந்து தலைவரை வரவழைத்து, அவரை நடுத்தெருவில் விட்டுவிட்டு கம்பிநீட்டுவது முறையா, அழகா? இதுதான் போகட்டுமென்றால், பண்டிதமணி அவர்களை ரயில் எற்றி அனுப்பவும் அவர்கள் வரவில்லை. மகாநாட்டை நடத்தியவர்கள் முக்கியமாகக் காரியதரிசி வரவேற்புக் கழகத்தலைவர் முக்கியஸ்த மெம்பர்கள் அவரை வழியனுப்ப வேண்டுவது கடமையும் மரியாதையும்அல்லவா. முக்கியமானவர்கள் இந்த மரியாதையையும் செய்யாமல், "யாருக்கோ வந்த விருந்து" என்னும் பழமொழிபோல் பாராமுகமாக இருந்துவிட்டது கண்டிக்கத்தக்கது. பாவம், செட்டியார் அவர்கள் இப்படிப்பட்டவர்களை நம்பி என் சென்னைக்கு வந்தாரோ தெரியவில்லை. சுயமரியாதைக்காரர்கள் இந்த விஷயம் அறிந்து மிகவும் ஆத்திரப்படுகிறார்கள். சு.ம.காரர்கள் எதையும் நேரில் கண்டிக்கப்பார்களேதவிர, மற்றப்படி கௌரவமாகவும் மரியாதையாகம் நடந்துகொள்வார்கள். மகாநாடு நடத்தியவர்களால் பண்டிதமணி இப்படி அவமானப்படுத்தப்பட்டதை அறிந்து சு.ம. காரர்கள்ஆத்திரப்படுவதோடு பண்டிதமணியை அவமானப்படுத்துவதற்காகவே கம்பர் மகாநாட்டார்சூழ்ச்சிக்கருத்துடன் வரவழைத்தார்களோ,என்றுகூடஐயப்படுகின்றனர். அபிப்பிராயபேதம் எப்படி இருந்தாலும் ஒரு தமிழ்ப்பெரியார் இவ்வாறு அவமானப்படுத்தப்படுவதை சு.ம.காரர்கள் கண்டிக்கிறார்கள்.

Edited Printed and Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press,
51-Chairman, Sambasiva Chettiar Street, L. Conjeeveram.